# ஹப்புத்தளை பிரதேசத்தில் சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புக்களும் சவால்கள்ும்

**N.P.F. SAFEENA**
**South Eastern University of Sri lanka**

## ஆய்வு சுருக்கம்

உலக நாடுகளில் மிக வேகமாக முன்னேறி வருகின்ற துறையாகவும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தூண்டக்கூடிய ஒரு காரணியாகவும் சுற்றுலாத்துறை காணப்படுகின்றுது.இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு அபரிமிதமானதாகும். இலங்கையில் சுற்றுலாத்துறையானது வேகமாகவும் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை பிரேதச சபைக்கு உட்பட்டதாக ஹப்புத்தளை பிரேதசம் காணப்படுவதுடன் சுற்றுலாத் துறைக்கான மையங்களையும் கொண்டுள்ளது. மாறுபட்ட கலாச்சாரங்களும் வேறுபட்ட பழக்கவழக்கங்களும் கொண்ட பல்லின மக்கள் வாழும் பிரதேசமாக இப்பிரதேசம் காணப்படுகின்றது இங்கு சுற்றுலாத்துறைக்கு சாதகமான காரணிகளாக சீரான குளிர் காலநிலை,இயற்கை காட்சிகள் , வரலாற்று மற்றும் சூழல் சார் சுற்றுலா மையங்கள் போன்றன காணப்படுகின்றன. இவ்வாய்வின் பிரதான நோக்கமாக இப்பிரதேசத்தின் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை இனங்காண்பதாகும். அத்துடன் இப்பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாத்துறைக்கான உள்ளார்ந்த வாய்ப்புக்களை அடையாளம் காணல் , இப்பிரதேசத்தில் சுற்றுலாவுக்கு தடையாகவுள்ள காரணிகளை கண்டறிதல், அவற்றை களைவதற்கான தீர்வுகளை முன்வைத்தல் , மற்றும் இங்கு சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவற்கான வழிகளை முன்வைத்தல்.. போன்றன இவ்வாய்வின் துணை நோக்கங்களாகும்.இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தி தகவல்கள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலை தரவுகளாக நேரடி அவதானம், நேர்காணல்(5-6 பேர்),வினாக்கொத்து (எழுமாறான முறை) போன்றவையும், இரண்டாம்நிலை தரவுகளாக பிரதேசசபை அறிக்கைகள்,இணையத்தளம்,பத்திரிகை கட்டுரைகள், நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டது. இப்பண்பு சார் மற்றும் அளவு சார் தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்காக Msexcel,Ms access, Arcgis போன்ற மென்பொருட்கள் பயன்படுத்தபடுத்தப்பட்டன. இப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறைக்கான வாய்ப்புகளாக எடிசன் பங்களா,துன்கிந்த நீர்வீழ்ச்சி மற்றும் லிப்டன்சிட்… போன்ற பல சுற்றுலா மையங்கள் காணப்படுவதுடன் இவற்றுக்கு தடையாக மூலதன பற்றாக்குறை, உட்கட்டமைப்பு வசதிகள் சீரின்மை, சிறந்த முகாமையின்மை, வழிகாட்டல்களின்மை, மக்கள் ஒத்துழைப்பின்மை போன்றன காணப்படுகின்றன. இத்தடைகளை நீக்குவதற்காக சுற்றுலாத்துறை சார்ந்த முதலீட்டார்களை ஊக்குவிக்க அரச மற்றும் தனியார் வங்கிகளும் கடன் வசதிகளை விஸ்தரித்தல் , ஒழுங்கமைந்த சுற்றுலா மையங்களை விருத்தி செய்தல் பொது மக்களின் ஒத்துழைப்புகளை பெறல் போன்றவற்றை விதந்துரைகளாக குறிப்பிடலாம்.இப்பிரதேசத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும் பொருளாதார மற்றும் சமுக ரீதியில் முக்கியம் பெறுவதற்கும் இவ்வாய்வு முக்கியம் பெறுவதுடன் ஒரு களமாகவும் அமைந்துள்ளது.

***பிரதான சொற்பதங்கள்**: சுற்றுலாத்துறை, சுற்றுலா மையங்கள், சுற்றுலா அபிவிருத்தி, சுற்றுலாவுக்கான வாய்ப்புக்கள், சுற்றுலாவுக்கான தடைகள்*

## ஆய்வின் அறிமுகம்

இன்று உலக நாடுகளில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு துறையாக ‘சுற்றுலாத்துறை’ காணப்படுகின்றது. சுற்றுலா என்பது ‘ஒரு நாட்டிற்கோ நகரத்திற்கோ, பிராந்தியத்திற்கோ வெளிநாட்டுப் பயணிகள் வருகை தருவது, தங்கிச் செல்வது பொருளாதார நோக்குடையது போன்ற அனைத்துச் செயற்பாடுகளின் தொகுப்பாகும்’’(ஹெர்மன் விசுலாட் 1991). இது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் ஒரு துறையாக வளர்ச்சி அடைந்து வருவதுடன் பிரதேச அபிவிருத்தி சார்ந்ததாகப்

பிரதேச மக்களின் வருமான பரம்பல், தொழில்வாய்ப்பு, தொடர்பாடல் என்பவற்றையும் பேணி மிக வேகமாக முன்னேறி வருகின்ற துறையாகவும் இத்துறை காணப்படுகின்றது.
அபிவிருத்திக்கு கணிசமான அளவு பங்களிப்பை வழங்க கூடிய ஒரு துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. அத்துடன் சேவைப் பொருளாதாரத்தின் மிகப்பெரிய கூறாகவும் இது இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1970 களின் பின்னரே சூழல் சார் சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்து வருகின்றது.இதனை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு ஐ.நா சபை 2002 இனை சர்வதேச சூழல் சார் சுற்றுலா ஆண்டாக பிரகடனப்படுத்தியது (கமூரா 2007).


சூழல்சார் சுற்றுலா “ஒரு இயற்கை தழுவிய பிரயாணமாகும்” (Hector ceallos Lascurain 1983). இன்று இதன் நிலை உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் பாதகமாக காணப்படுகின்றது.

இன்று உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் சுற்றுலாத்துறை வேகமாகவும் தொடர்ச்சியாகவும் வளர்ச்சி கண்டு வருவதாகவும் எதிர்காலத்தில் சுற்றுலாக் கைத்தொழில் நாடாக இலங்கை வளர்ச்சியடைந்து வருவதற்கான வாய்ப்புகளையும் இயற்கை எழில்மிகு மூலவளங்களையும் இலங்கை சுற்றுலாத்துறை கொண்டு காணப்படுவதாக சர்வதேச சுற்றுலா (உல்லாசபிரயாணி) அமைப்பு (WTO) எதிர்பார்க்கின்றது. (“யாழ்ப்பாண புவியியலாளர்கள்”)

இலங்கை பன்னெடுங்காலமாக வெளிநாட்டவர்களை தன்பால் கவர்ந்திழுக்கும் சுற்றுலா நாடாகும். இலங்கையின் அமைவிடம் மற்றும் பௌதீகத் தன்மைகள் இதற்கு காரணமாகும். அந்த வகையில் ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் புதிதாக இனங்காணப்பட்டுள்ள சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புக்களை கொண்ட பிரதேசமாக ஹப்புத்தளை பிரதேசத்தைக் குறிப்பிடலாம்..இப்பிரதேசத்தில் உள்நாட்டு மூல வளங்களையும் இயற்கை எழிலையும் வைத்து சுற்றுலாத்துறையை திட்டமிட்டு வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் தொழில் வாய்ப்புக்கள் பெருகுவதுடன் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரமும் வளம் பெறும் எனலாம்.

## ஆய்வு பிரதேசம்

ஹப்புத்தளை பிரதேசமானது $6^{0}$ $46^{1}$ $4^{11}$ வடக்கேயும் ,கிழக்கு $80^{0}$ $57^{1}$ $31^{1}$ இற்குமிடையில் அமைந்துள்ளது. மொத்த சனத்தொகை 54989 ஆகவும். பெருந்தோட்ட மக்களின் எண்ணிக்கை 16215 ஆகவும் காணப்படுகின்றனர் (www.haputale location.com). உலகளாவியரீதியில் இலங்கை பிரபல்யம் அடைய காரணமாக அமைவதே தேயிலை என்றால் மிகையாகாது.இங்கு தேயிலை செய்கை,பொருளாதாரத்தில் முக்கியமான பெருந்தோட்ட பயிராகும்.




இலங்கையின் பதுளை மாவட்டதிதில் ஹப்புத்தளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதாக 'ஹப்புத்தளை' எனும் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய பல சுற்றுலா மையங்களைக் கொண்டமைந்தாக காணப்படுகின்றது. இங்கு இந்துக்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய மூவின மக்களும் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு இனமக்களும் வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் மாறுபட்ட பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளமையானது கலாச்சார ரீதியான சுற்றுலாவை மேற்கொள்பவர்களை கவரக்கூடிய விடயமாக காணப்படுகின்றன்றது

மேலும் சூழல்சார் சுற்றுலாவை மேற்கொள்பவர்களுக்குச் சாதகமான இயற்கை காட்சிகளை கொண்ட எழிலழகும் இப்பிரதேசம் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் வரலாற்று சார் புகழ்மிக்க அமைவிடங்கள் வரலாற்று சுற்றுலா பயணிகளுக்கான சாதகமான தன்மையை உருவாக்கியுள்ளது. இவ்வாறான சுற்றுலா மையங்களுடனூடாக சுற்றுலா பயணிகளின் வருகையானது அதிகரிக்கும் போது அந்நியச் செலாவாணி வருமானம் அதிகரிப்பதுடன் அது இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை தூண்டுகோலாய் அமைவதுடன் இப்பிரதேசத்தை சுற்றியுள்ள சிறு கிராமங்கள் விருத்தி செய்யப்படுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் உள்ள வேலையில்லா பிரச்சினைக்கு ஒரு தீர்வினை தரும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

**நோக்கங்கள்**

இவ்வாய்வானது மலையகத்தில் உள்ள ஒரு பின்னடைந்த பிரதேசத்தின் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை இணங்காண்பதனை பிரதான நோக்காக கொண்டுள்ளது. அத்துடன் இப்பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாத்துறைக்கான உள்ளார்ந்த வாய்ப்புக்களை அடையாளம் காணல் ,இப்பிரதேசத்தில் சுற்றுலாவுக்குத் தடையாகவுள்ள காரணிகளை கண்டறிதல் மற்றும் இத்தகைய தடைகளை களைவதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

இப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதற்கான உத்திகளை முன்வைத்தல் , மலையகத்தில் பிரதான சுற்றுலாத்துறைக்கான பிரதேசமாக இதனை மாற்றியமைப்பதற்கான வழிகளை அடையாளப்படுத்தல் , மற்றும் அதனை அடையாளப்படுத்தல் போன்றன துணை நோக்கங்களாக கூறமுடியும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது இயற்கையைச் சார்ந்து காணப்படுவதனால் இது ஒரு பரந்துபட்ட ஆய்வாக விளங்குகிறது. இப்பிரதேசம் சூழல் சார் சுற்றுலாவுக்கான உள்ளார்ந்த வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.இதனப்படையில் இவ்வாய்வானது பௌதீக மற்றும் பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்புபட்டு காணப்படுவதனால் இவ்வாய்வுக்காக எண்சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடதக்கதாகும்.
முதலாம் நிலைத்தரவுகளை நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து, நேர்காணல் முறைகள் மூலமாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பிரதேசம் தொடர்பாக நன்கு அனுபவமுடையவர்கள் சிலருடனும் சில தகவல் வழங்குபவர்களுடனும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இத்துடன் இங்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகள் அனைவரையும் ஆய்வுக்குட்படுத்த முடியாமையினால் மாதிரித் தெரிவின் போது நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் தரவுகள் பெறப்பட்டன.தரவு சேகரிப்பதற்காக கலந்துரையாடல், நேர்காணல் , அவதானிப்பு முறை,வினாக்கொத்து முறை போன்றன பயன்படுத்தப்பட்டன.
இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், ஹப்புத்தளை பிரதேச காரியாலய அறிக்கைகள், இணையத்தளங்கள், பத்திரிகைக் கட்டுரைகள் போன்றன பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.

ஆய்வுக்காக தெரிவு செய்யப்படும் மாதிரிகள்

| **மாதிரிகள்** | **எண்ணிக்கை** | **வீதம்**(%) |
|---|---|---|
| சுற்றுலா பயணிகள் | 100 | 50 |
| சுற்றுலா விடுதிகள் | 30 | 15 |
| சாரதிகள் | 10 | 05 |
| கடைக்காரர்கள் | 10 | 05 |
| நடமாடும் வியாபாரிகள் | 05 | 02 |
| நிரந்தர வியாபாரிகள் | 05 | 2.5 |
| கிராம சேவகர்கள் | 02 | 01 |
| சுற்றுலா அதிகாரிகள் | 01 | 01 |
| மொத்தம் | 200 | 100 |


Source; Field work 2016

**தரவு முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

இவ்வாய்வுக்காக வினாக்கொத்து வழங்குதல்,நேர்காணல்முறை, கலந்துரையாடல் மற்றும் நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் ஆய்வு நுட்பங்களாக பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் சுற்றுலா மையத்திற்கு வருகின்ற மற்றும் அங்குள்ள விடுதிகளில் தங்கிச் செல்வதற்காக வருகின்ற சுற்றுலா பயணிகளிடம் வினாக்கொத்துக்களை வழங்கி தரவுகள் சேகரித்ததுடன் அப்பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் போன்ற முக்கியமான சிலர்களிடம் சென்று நேர்காணல் மூலமும், சுற்றுலா மையத்திற்குச் சென்று நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்டதன் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

வினாக்கொத்தில் விடையளித்தவர்கள் , நேர்காணலில் பதிலளித்தோர்கள் போன்றவற்றின் எண்ணிக்கையைக் கொண்டும் முடிவுகள் பெறப்பட்டு ஆய்வு முடிவுகளை இலகுவாக விளங்கிக் கொள்வதற்காகப் புள்ளிவிபர நுட்பமுறை பயன்படுத்தப்பட்டு வரைபடங்கள், அட்டவணைகள் மூலமாக அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான நோக்கங்களான பொழுது போக்குக்காக வருதல்(40%) இயற்கையை இரசித்தல்(25%), வர்த்தக நடவடிக்கைகள்(20 %) , விருந்தினர்களாக வருகைத் தருதல்(15%) மற்றும் போன்றவற்றை பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




Source: Secondary and field data collection 2001

**பகுப்பாய்வும் முடிவுரையும்**

ஹப்புதளைப் பிரதேசங்களின் சுற்றுலாத் துறையை பொறுத்தவரையில் சூழல் சார் சுற்றுலா, வரலாற்றுச் சுற்றுலா, மற்றும் கிராமிய சுற்றுலா என்பவற்றுக்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவை தவிர இலங்கையில் இயற்கை எழில் மிகுந்த பகுதியாக மலையகம் காணப்படுகின்றதுடன் உலகரீதியாக புகழ்பெற்ற சில சுற்றுலா மையங்கள் ஹப்புத்தளை பிரதேசத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவை உலகரீதியாக சுற்றுலாத்துறைக்கான வாய்ப்புக்களை கொண்டுள்ள போதிலும் மலையகத்தின் பின்தங்கிய பிரதேசங்களாக இவை காணப்படுதல், உட்கட்டமைப்பு சீரின்மை, சிறந்த முகாமைத்துவம் காணப்படாமை, மூலதனப்பற்றாக்குறை, வழிகாட்டல்களின்மை, மக்களின் ஒத்துழைப்புக்கள்

பெற்றுக்கொள்ளாமை மற்றும் இப்பகுதியில் உள்ள சுற்றுலா மையங்களை இனங்கண்டு அவற்றினை அபிவிருத்தி செய்யாமை போன்ற பல விடயங்கள் ஹப்புத்தளை பிரதேச சுற்றுலாத்துறைக்கான தடைகளாகும்.

ஹப்புத்தளை பிரதேசத்தின் சுற்றுலாத்துறையை வளர்ச்சிப்பாதையில் நடாத்தி செல்வதன் மூலம் இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் மலையக முன்னேற்றத்துக்கும் மட்டுமன்றி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் சாதகமாக அமையும்.இதற்காக இப்பிரதேசத்தில் சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புக்களை இனங்கண்டு இவ்வாய்ப்புக்களுக்காக இப்பிரதேசத்தில் காணப்படும் தடைகளை இனங்கண்டு இவற்றை களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.இதற்காக சுற்றுலா துறை சார்ந்த முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அரசு மற்றும் தனியார் வங்கிகள் கடன் வசதிகளை விஸ்தரித்தல் , ஒழுங்கமைந்த சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்தல், சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்க பொதுமக்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளுதல் போன்றன விதந்துரைகளாக இவ்வாய்வானது உள்ளடக்கியிருக்கின்றது.

மேலும் ஆய்வின் தரவுகளின் பகுப்பாய்வின் படி ஆய்வுப்பிரதேசத்துக்கு வருகைத்தரும் சுற்றுலா பயணிகளை நோக்கும் பொழுது இவர்களின் நோக்கங்களுக்கான செயற்பாடுகள் சூழல்சார் சுற்றுலாத் துறையின் நோக்கத்திற்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துபவையாகக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கவையாகும் .

இப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு இவ்வாய்வு முக்கியம் பெறுவதுடன், பொருளாதார மற்றும் சமூகரீதியில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படும் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதிலான தடைகளை இனங்கண்டு அவற்றினைக் களைவதினூடாக அதனை அபிவிருத்தி செய்வதற்கும் பல வழிமுறைகளை எடுத்துரைப்பதற்கும் இவ்வாய்வானது ஒரு களமாக அமைந்துள்ளது.

**உசாத்துணைகள்:**


- பேராசிரியர் குகபாலன்.கா“இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் துறையின் அண்மைக்காலப் போக்குகள்” யாழ்ப்பாண புவியியலாளன்.
- அதுல குணபால,கே: ‘இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் “தற்போதைய போக்குகளும் பொருளாதார பங்களிப்பும்” மக்கள் வங்கி வெளியீடு,இலங்கை.
- www.Haputala.ede.tourist.com
- Srilanka TourismDevelopment Authority (2009-2011),Annual Stutistical Report (SLTDA)
- http://www.sltdu.gov.lk/tourism-planning and development(Access 2012)